1982 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஆயுள் காப்பீட்டுக் கழகம் தருவது $10\frac{1}{2}\%$. மற்றவைகளையப் பற்றிய குறிப்பு என்னிடத்திலே இல்லை. நாம் போதுமான நிதியை மற்ற நிறுவனங்களிலே இருந்து பெறமுடியும், என்ற காரணத்தால் மீண்டும் காப்பீட்டுக் கழகத்திடம்போய் கோரிக்கை வைத்து அதற்காக நேரத்தை செலவு செய்யவேண்டிய தேவை இல்லை என்று இப்போது கருதுகிறேன்.

தீப்பெட்டித் தொழிலில் சிறுவர்களை பயன்படுத்துவதைத் தடை செய்யும் திட்டம்.

*வினா எண் 726— திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீப்பெட்டித் தொழிலில் சிறுவர்களை பயன்படுந்துவதை தடுக்க (Child Labour) அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: சிறார்களை வேலைக்கு அமர்த்துவதை தடுக்குமுகமாக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அ. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் கூட்டப்பட்ட தொழில் உரிமையாளர்கள் கூட்டத்தில் 10 வயதுக்கு குறைவான சிறார்களை 2.10.76 முதல் வேலைக்கு அமர்த்துவதில்லையென்றும், பணிக்கமர்த்தப்படும் சிறாரைப் பற்றிய பட்டியலை தீப்பெட்டித் தொழிற்சாலை சமர்ப்பிக்கும் என்றும், 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டம், 1938 ஆம் ஆண்டு சிறார்களை வேலைக்கு அமர்த்தும் சட்டம் ஆகியவற்றின் கீழ் விரிவான சோதனைகளை தொழிற்சாலை ஆய்வாளர் நடத்துவர் என்றும், முரண்பாடுகள் இருப்பின் கண்டிப்பான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

ஆ. சிவகாசி நகராட்சி எல்லைக்கு வெளியே 5 கிலோமீட்டர் தொலைவிற்குள் புதிதாக தீப்பெட்டி, பட்டாசுத் தொழிற்சாலைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இ. சிறார் வேலை பிரச்னைகள் பற்றி பரிந்துரைகள் செய்ய இராமநாதபுர மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு ஆலோசனைக் குழுவும் தொழிலாளர் நல அமைச்சர் தலைமையில் மாநில மட்டத்தில் ஒரு ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டுள்ளன.

ஈ. நிர்ணயிக்கப்பட்ட குறுமக்கூலியில் பாதியளவு மட்டுமே சிறார்களுக்கு அளிக்கப்படவேண்டும் எனும் விதியை நீக்கலாமென அரசு கருதுகிறது. தொழிலாளர் நல ஆணையர் இதுபற்றி பரிசீலித்து வருகிறார்.

திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இங்கே பதிலளிக்கும்போது மாவட்டக் கலெக்டர் தலைமையிலே எடுக்கப்பட்ட முடிவுகளைச் பற்றிச் சொன்னார்கள். ஆனால் இந்த முடிவுகளையெல்லாம் மீறி, சிவகாசியிலுள்ள தொழிற்சாலைகளில் சிறுவர்களும், சிறுமியர்களும், இன்னமும் அவர்களை வேலை வாங்கக்கூடிய ஒரு நிலைமை இருப்பதைத் தடுப்பதற்கு, கடுமையான நடவடிக்கைகள் எடுக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதும் கடுமையான நடவடிக்கைகள், பிராசிக்குசன் எல்லாம் செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளை மனதில் வைத்து, தீவிரமான நடவடிக்கை எடுக்க அரசு முயலும்.

நாகர்கோவிலில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 727—திரு. மி. வின்செண்ட்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நாகர்கோவிலில் பாதாள சாக்கடை திட்டம் என்ன நிலையில் உள்ளது?

(ஆ) எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: (அ) மற்றும் (ஆ): ரூ. 930.00 இலட்சங்கள் அமைப்புச் செலவிலும் ரூ. 32.50 இலட்சங்கள் வருடாந்திர பராமரிப்புச் செலவிலும் நாகர்கோவிலுக்கு ஒரு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தயாரித்தது. ஆனால் அந்நகராட்சியின் நிதி நிலைமை பற்றாக்குறை காரணமாக தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டது.

திரு. மி. வின்செண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பேஸ்டு பிராககிராம் என்ற அடிப்படையிலே இதை செய்யலாம் என்று மாவட்ட வளர்ச்சிக் கூட்டத்தில், டி. டி. சி, கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அத்தகைய தீர்மானம் அரசுக்கு வந்துள்ளதா? அப்படி வரவில்லையென்றால் அந்த அதிகாரிகளிடம் அரசு அதற்கான காரணத்தைக் கேட்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானம் நிறைவேற்றப்பட்ட உடனேயே அவைகள் அரசுக்கு உடனே வந்துவிடாது.